தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி ௵ மார்கழி ௴ 16௳ (31-12-'22.) | ப. 35

விஷய அடக்கம்.

1. உலக நடை ... 371
(உதவி பத்திராதிபர்)
2. ஓர் புதிய மசோதா ... 372
(மதாபிமானி எழுதியது)
3. காலத்தின் கொடுமை ... 373
(காஞ்சன குமார்)
4. அரசாங்கக் கடன்கள் ... 374
(R. பஞ்சாபகேசன்)
5. மனோன்மணீய வசனம்:
ஜீவகன் ... 375
(S. வையாபுரி பிள்ளை B.A., B.L.,)
6. தேகசௌக்கியமும் ஆகாரமும் 376
(V. பாலஸுந்தரம், B. A., B. L.,)
7. கட்டடக் குறிப்புகள் ... 376
(B. ராமஸ்வாமி)
8. நமது தாய்மொழி ... 377
(ஊ. சா. வேங்கடராம ஐயர்)
9. புயற் காற்று ... 378
(V. நாராயணையர், M. A., M. L.)

தமிழ் உலகு
(THE TAMIL WORLD)

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவரும்
தமிழ் வாரப் பத்திரிகை
பத்திராதிபர், S. பட்டாபிராமன் M. A.

சந்தா விவரம்:—

உள் நாடு.	வெளி நாடு.
½-வருஷம் ரூ. 3 0 0	½-வருஷம் ரூ. 3 8 0
1-வருஷம் ரூ. 5 0 0	1-வருஷம் ரூ. 6 0 0

எளிய நடையில் எழுதப்பட்டது; பாமரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவுமாறு பலவிதமான பொருள்கள் அடங்கியது; பிரதிவாரம் லௌகிக விஷயங்களைப்பற்றிய குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியது. மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அநுமதி கொடுத்திருக்கிறார். 'சித்திரா' வென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் "புயற் காற்று" இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

ஆகவே, தமிழைப் பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்,
மைலாப்பூர், சென்னை.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்
எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒற்றைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.
டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் டி. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.

உம்மிடி
ராமய்யசெட்டி
குருசாமிசெட்டி
கம்பெனி

நம்பிக்கையான நகை வர்த்தகர்கள்

25, சைனுபஜார் ரோட், மதராஸ்

ఉమ్మిడి రామయ్య శెట్టి, గురుసామి శెట్టి

కంపెనీ

నగల వర్తకులు

25, చైనా బజార్ రోడ్డు, మదరాసు.

தமிழகம்.

மலாய் நாட்டின் தனித்தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி திங்கள் வியாழக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பிஞங், சிங்கபூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கிய மலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தார் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில விஸ்தாரமாய்ப்பரவுகின்றது. இதன் வருட சந்தா ரிங்கி 10.00 டீமா தத்திற்கு ரிங்கி 5.50. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபா 15. ஆறு மாதங்களுக்கு ரூபாய் 8.

மானேஜர், "தமிழகம்" ஆபீஸ்'

நெம்பர் 190, பத்து ரோட், கோலாலம்பூர்.

துப்பறியும் நாவல்கள்

ஆரணி குப்புசாமிமுதலியார் எழுதியது

		ரூ.	அ.
இந்திரா பாய்	...	2	8
அல்லது இந்திரஜாலக் கள்வன்			
சுந்தர சிங்	...	1	8
அல்லது பாஸ்கரவிலாஸ் படுகொலை			
அம்புஜாக்ஷி	...	2	0

வி நாராயணன் கம்பெனி,

4, கொண்டிசெட்டி தெரு, மதராஸ்.

ஆத்திசூடி நீதிக்கதைகள்

ஸ்ரீ கலைமகள் அவதாரமாகிய ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி நீதிவாக்கியங்களுக்கு உதாரணமாக இதிகாச, புராண, சரித்திரங்களிலிருந்து எடுக்கப்பெற்ற 108 கதைகள் இனிய செந்தமிழ் நடையில் நீதிகளை விளக்கி எழுதப்பெற்றுள்ளன. சில படங்களும் அமையப்பெற்றது.

இதன் விலை அணு 8.

24 மணிநேரத்திற்குள் குணம்

உலகப் பிரசித்தி பெற்ற வி. ஜி. என். அவர்களின் ரிங்குவரம் லோஷன் உபயோகிப்பதினுல், எல்லாவித படை, எச்சத்தளிம்பு, மேகபடை, இவைகள் 24 மணி நேரத்திற்குள் நீங்கும். நிகரற்ற நற்சாட்சி பத்திரங்கள் பெற்று இருக்கிறது.

		புட்டி-1க்கு	0-10-0
சிகப்பு வாசனை சாந்து	,,	,,	0-4-0
கருப்பு வாசனை சாந்து	,,	,,	0-4-0
சிகப்பு மார்கு இங்கி துணிகளுக்கு குறிபோடுவது			0-4-0

கேட்லாக் இனும்.

மார்டன் அண்டு கம்பெனி,

13, கிருஷ்ணப்ப நாயகன் அகிரஹாரம்,

மிண்டு பில்டிங்குஸ், மதருஸ்.

பரதன் உத்தம சகோதரன்

பலகோடி நீதிகளைப் புகட்டும் ஸ்ரீ ராமாயணக் கதைகளைச் சுருக்கமாகவும், அவற்றுள் பரதனது குணதிசயங்களை விரித்தும், கம்பராமாயணத்தினின்றும் சில முக்கிய மேற்கோட்பாக்களுடன் தெள்ளிய நடையில் யாவருக்கும் எளிதில் புலப்படும்படி இனிமையாக எழுதியுள்ளது.

" இப்புத்தகத்தில் பரதனது பக்தி, பெருந்தன்மை, மனவுறுதி, ஸத்தியம் முதலிய சற்குணங்கள் தெள்ளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. சந்தர்ப்பத்திற்கேற்ப இடையிடையே கம்பராமாயணத்தினின்று சில பாட்டுக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சிறுவரும் சிறுமிகளுங் கூடப் படித்துப் பொருள் தெரிந்துகொள்ளும்படி அவ்வளவு இனிய எளிய நடையில் இயற்றப்பட்டிருக்கிறது." — பெண் கல்வி. இதன் விலை அணு 8.

கணேஷ் கம்பெனி,

39, தம்பு செட்டி தெரு, சென்னை.

உலக நடை

[உதவி பத்திராதிபர்]

இவ்வாரம் காங்கிரஸ் மகாநாடு கயையில் கூடி சட்டசபை பிரவேசத்தைப்பற்றி தீவிரமான விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன. எவ்விதமான முடிவடையுமெனச் சொல்லக் கூடவில்லை. அக்கிராஸநாதிபதி சட்டசபை புகுந்து ஒத்துழையாமை நடத்துவதை தாங்கி வருகிறார். அக்கிராஸநாதிபதியின் முன்னுரை வெகு நேர்த்தியாக வரையப்பட்டிருக்கிறது. சட்டம் பயின்று நியாயவாதத்தில் தேர்ச்சி பெற்றவர் எந்தக் கட்சியையும் யாவரும் ஒப்பும்படி பல உதாரணங்களுடன் விளக்கிக் காட்டுவதில் திறமை படைத்தவரே. காங்கிரஸ் அங்கத்தினர் பெரும்பான்மையோரும் சட்டசபை நுழைதல் கூடாதெனவே அபிப்பிராயப்படுகின்றனர். முஸ்லீம்களில் எல்லோருக்கும் இவ்வபிப்பிராயமே மேலிட்டிருக்கிறது. முஸ்லீம்களிலோ அல்லது ஹிந்துக்களிலோ முக்கால் பகுதியினர் ஓர் தீர்மானத்திற்கு விரோதமாயிருந்தால், அத்தீர்மானம் காங்கிரஸில் நிறைவேற்றக் கூடாதென ஓர் விதியும் உண்டு.

சட்டசபை வேலைகளைத் தடுக்கவாவது வேண்டும் அல்லது நமக்கிணங்கிய ஆட்சி முறையை அச்சட்டசபைகள் பற்றும் வண்ணம் மாற்ற வேண்டும் எனக் கூறுவர் அக்கிராஸநாதிபதி ஸ்ரீமான் தாஸ் அவர்கள். ஒத்துழையாமையின் முறை சீக்கிரத்தில் ஜயமடையாதது சட்டசபை அதிகாரி வர்க்கத்தினருடைய தந்திரச் செயல்களுக்கு இசைந்து வேலைகளைச் செய்வதாலேயாம். சட்டஸபையின் வேலைகள் முன்போல் இனியும் நீடித்து வந்தால் ஒத்துழையாதாரின் எண்ணிக்கை வரவரக் குறைவடையுமாம். அழிக்கவேண்டியதை அழிப்பதற்கு பிரயாஸை யெடுத்தாலன்றி நிர்மாண ஸ்தாபனங்களை நாட்ட இயலாதாம். அழிக்கும் எண்ணத்துடனாவது அல்லது திருத்தும் எண்ணத்துடனாவது சட்டஸபை புகுவது ஒத்துழையாமை தர்மத்திற்கு விரோதமில்லையாம். அன்னிய நாட்டுச்சரக்குகளின் மறியல் விஷயமாய் வாங்குபவர்களைத் தடுப்பதுடன் விற்பதையுங் கெடுக்க வெண்ணுகிறதுபோல, ஸட்டஸபைகள் செய்யும் வேலைகளைத்தடுக்க உட்சென்று முயற்சி செய்யவேண்டுமாம்.

ஸ்ரீமான் தாஸ் அவர்கள் தேச பக்தி வாய்ந்தவர். சிறை புகுந்தும் வக்கீல் தொழிலை விட்டும் சிறந்த தியாகம் செய்தவர். அக்கிராஸநாதிபதி முன்னுரையில் பாரத கண்டத்தின் கைங்கரியமே ததும்பி விளங்குகிறது. கைங்கரியம் சித்தி பெறுவதற்கே ஒத்துழையாமை முறையைத் திருத்த வேண்டுமென நிஜநோக்கங் கொண்டு உழைக்கிறார். அவர் உழைப்புக்கு நாம் மிகவும் நன்றி செலுத்த வேண்டும். நமது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய மகானே அவர். கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு முறையை மாற்றுவதற்கு முயலும் அவரது முயற்சிக்கு நாம் கூடிய வரை செவிகொடுத்து தீர விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சட்டஸபைகள் நாம் கோரிய பலனைக் கொடுக்கவில்லையெனக் கண்டு கொண்டோம். வேறு ஸ்தாபனத்தை இயற்ற வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஒரு ரயில்வே மார்க்கம் நமக்குத் திருப்தியற்றதாயிருந்தால் நாம் செய்வதென்ன. வேறு மார்க்கத்தை திருப்திப்படுமாறு அமைத்து, அதாவது தண்டவாளங்கள் முதலிய எல்லாச் சாதனங்களையும் நாட்டிய பின்னரே, மார்க்கத்தை ஒருபுறமிருந்து ஒருபுறம் திரும்பச் செய்கிறோம். இவ்விதம் நம் அரசாங்கக் கட்டடம் உபயோகமற்றதாயிருந்தால், வேறு உபயோகப்படக் கூடிய கட்டடத்தை யமைத்த பின்னரே, உபயோகமற்ற கட்டடத்தை அழிக்க வேண்டும். நம் நிர்மாண வேலைகள் இதுவரை நன்றாக நடந்தேறவில்லை. அவ்வேலைகளில் நம் மனதைச் செலுத்தி அரசாங்க ஸ்தாபனத்திற்குரிய எல்லாக் கருவிகளையும் ஒருவாறு உபயோகப்படச்செய்து, உடன் அழிக்கும் வேலையைத் துவங்குவோம்.

அக்கிராஸநாதிபதி தாஸர் சட்டஸபைகளைத் திருத்தவாவது வேண்டுமெனச் சொல்லுகிறார். சட்டஸபைகளின் அஸ்திவாரத்திலேயே கெடுதல்களிருக்கின்றன. திருத்தவேண்டுமென்றால் அழிக்கத்தான் வேண்டும். வெளியிலிருந்தே தான் அழிக்கக்கூடும். மரத்தின்மேலிருந்து கீழே வெட்டரியை யுபயோகிப்பதை உலகத்தில் என்னென்றுரைக்கிறார்கள். தவிரவும் நம்மை சுற்றியிருப்பவர்களில் சுயநலங் கருதியவர் பலர் இருப்பதை தாஸர் கண்டறியவில்லை. தாஸர் மஹான் என்பதில் ஐயமில்லை. அவரைப்போன்று சிலரே தான் காணப்படுவார்கள். பலர் காங்கிரஸையே எவ்விதமாயாவது திருத்தி தங்கள் சுயநலத்தைத் தேடியே வெளிக்கு தேசநலம் புரிவதுபோல் நடிக்க வெண்ணங்கொண்டிருக்கிறார்கள். சட்டஸபைப் பிரவேசத்திற்கு காங்கிரஸ் இடங்கொடுத்துவிட்டால் ஒத்துழையாமை இயக்கமே ஒடுங்கிவிடுமென்பதில் ஸந்தேகமில்லை. தங்களையே நாசமாக்கிக்கொள்ள எண்ணும் யாவரும் சட்டஸபைப் பிரவேசத்தை ஆதரிக்கலாம்.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் அவர்களின் தலைமையில் வேறொரு மகாநாடு நடைபெறுகின்றது. இம்மகா நாட்டில் சிலரே கூடியிருக்கின்றனர். பத்திரிகைகளில் இவர்களுடைய ஸபையைப்பற்றிய ஸமாசாரங்கள் காங்கிரஸ் ஸமாசாரங்களைப்போலவே இடையில் சேர்த்து பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. சட்டஸபைப் பிரவேசத்தை காங்கிரஸ் ஆதரித்துவிட்டால் கூடிய சீக்கிரத்தில் இச்சபையும் காங்கிரஸுடன் சேர்ந்துவிடும். எனினும் காங்கிரஸ் தீர்மானங்களைத் தாங்கும் பொதுஜனங்களின் ஊக்கம் குறைந்துவிடும்.

ஸதாராவில் பிராமணரல்லாதார் மகாநாடு நடந்தேறிவிட்டது. ஒத்துழையாமையைக்கண்டனமும் செய்துவிட்டார்கள். இம்மகாநாடு துவேஷ புத்தியையே கைக்கொண்டதால் குறைகளைச் சீர்திருத்த முற்படவில்லை ஆயினும் ஒத்துழையாதார் இவர்களிடம் அன்பையே செலுத்துகிறவர்கள். நாட்டின் நலத்தையே பெரிதாக மதித்து இம்மகா நாட்டுத் தலைவர்களை ஒத்துழையா

மையில் சோகது ஒத்துழைக்கும் வண்ணம் காங்கிரஸ் பிரார்த்திக்கிறது. இம்மகா நாட்டின் உயரிய லட்சியங்களுக்கு காங்கிரஸ் இசைந்திருக்கின்றது. பிறப்பால் உயர்வில்லை யென்றே காங்கிரஸ் கூறுகின்றது. தேச ஜனங்கள் யாவருக்கும் நன்மையே செய்ய காங்கிரஸ் உழைக்கின்றது. ஒவ்வொரு ஜாதியினரும் மதத்தினரும் தங்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லி துவேஷபுத்தியில்லாமல் தீர்த்துக்கொள்ளும்படி காங்கிரஸ் வேண்டுகின்றது. எதிரிகளிடமும் அன்புபூண்ட காங்கிரஸின் லட்சியங்கள் ஈசனருளால் தவறாது நிறைவேறும்.

சாஸ்திர ஆராய்ச்சி நிபுணர்கள் கம்பியில்லாத் தந்தியால் படங்களையும் பலதூரத்துக்கப்பால் வெகு சீக்கிரமாக சேரும்படி ஓர் முறையைக் கண்டு பிடித்திருக்கின்றனர். இதனால் பத்திரிகைகளும் ஒரு புதுவிதமாக மாறுமென நினைக்க வேண்டியிருக்கிறது. கண்களால் எழுத்துகளைப் பார்த்து எழுத்துக்களின் சேர்க்கைகளுக்கு கற்பித்திருக்கிற பொருளை மனது கவர்ந்து களிக்கிறதைக் காட்டிலும் படங்களைப் பார்த்த மாத்திரத்தில் மனது களிப்படையுமாறு படங்களுடன் பத்திரிகைகள் எங்கும் பரவத் தொடங்கிவிடும். இதற்கு முன்னமேயே படங்களால் விளக்கிய பத்திரிகைகள் பல உலாவுகின்றன.

ஒரு புதிய மசோதா

[மதாபிமானி எழுதியது]

கோயில்கள் மடங்கள் முதலியவற்றின் தரும சொத்துக்களையும் இனி இவைகளுக்குக் கிடைக்கும் வருமானத்தையும் செலவிடுவதற்காக ஒரு புதிய மசோதாவை பனகால் ராஜாவாகிய மந்திரியார் சென்னைச் சட்ட சபையில் சட்டமாக்கக் கொணர்ந்திருக்கிறார். அதைப் பரீக்ஷித்து தமது அபிப்பிராயத்தை வெளியிடும்படி சட்ட சபையார் ஒரு 'கம்மிட்டி' ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இப்புதிய சட்டத்தால் உண்டாகக்கூடிய திருத்தங்களையும் மாறுபாடுகளையும் எல்லோரும் அறிந்து தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு இது தான் தக்க சமயம்.

தரும சொத்துக்களை பரிபாலிப்பது துரைத்தனத்தாரின் கடமை; இப்போது தரும சொத்துகளுக்கு சரியான மேற்பார்வையின்றி அநேகமாய் அவை நாசமடைகின்றன; இப்போதுள்ள கோயிற் கம்மிட்டிகளுக்கு இருக்கும் அதிகாரங்கள் மிகக் குறைவே. மடங்கள் முதலிய வேறு தருமங்களை நிர்வகிப்பவர்களுக்கு மேல் அதிகாரிகள் ஒருவருமில்லை. பொதுஜன விஷயமாய் முன் கேசு நடத்துவோருக்கு பலவித இடையூறுகள் நேரிடுகின்றன. அப்படி முன் வருவதற்கு யாருக்கு அதிகாரமுண்டு என்ற விஷயமாய் கோர்ட்டுகளுக்குள் அபிப்பிராய பேதமுண்டாகி சமீபத்தில் இவ்விஷயங்களில் சிரத்தை படைத்த பலரை அதிகாரமற்றவர் என்றே தீர்மானித்திருப்பதால், முன் கேஸுகள் நடத்தத் தயங்கியவர் இப்போது முன் வருவார்களோ?

ஆகவே, தரும சொத்துக்களுக்கு ஒழுங்காய் கணக்குகள் வைத்து செலவுகளுக்கு வரம்புகள் ஏற்படுத்திக்கொண்டு, அவைகளின்படி நின்று, பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மேற்பார்வைக்கு கணக்கு முதலியவற்றை யனுப்பச்செய்யும் சட்டமொன்று இருக்க வேண்டியதே. அவ்விதம் செய்வது மத விஷயங்களில் தலையிடுவதாகாது. இது விஷயமாய் சீர்திருத்தஞ் செய்ய முயலும் இம்மசோதாவை நன்றென்றே கொள்ளவேண்டும்.

ஆயினும் இந்த மசோதாவில் சில பெரும்பிழைகள் இருக்கின்றன. சட்டக் கமிட்டியார் அவைகளை மாற்றுமாறு பொது ஜனங்கள் அவர்களை வற்புறுத்தவேண்டும். உதாரணமாக

(1) கணக்குகள் வைக்கச்செய்து தரும சொத்துக்களையும் வருமானத்தையும் துர்விநியோகம் செய்ய வொட்டாமல் தடுப்பது நியாயமே. தவிர, விநியோகப்படுத்தப்படாத சொத்துக்களையும் வருமானத்தையும் இதர வழிகளில் செலவிட எவருக்கும் அதிகாரம் கொடுப்பது அரசுரிமையல்ல; தருமங்கள் பலவகைப்பட்டன. சர்வ சம்மதமாய் நல்ல வழியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட வழிகள் எல்லாம் தருமங்கள் ஆகுமோ? பணஞ்செலவிட தருமமல்லாத வேறு நல்வழிகளும் உண்டு. ஆகையால் தரும தாதாக்களின் இஷ்டப்படியே அந்தந்த தருமத்திற்கென்று கொடுக்கப்பட்டதை அதற்கே செலவிடுதல் நீதி; வேறு வழிகளில் செலவிடுதல் அவர்களுக்குத் துரோகஞ் செய்ததாகும். "இனி இவற்றிற்குப் பணங்கொடுத்தால் மிகுந்ததை எங்களிஷ்டப்படி வேறு வழிகளில், செலவிடுவோம்" என்று தங்கள் கருத்தை வெளியிட்டு தருமங்களுக்குப் பணங்கொடுப்போரைத் தடுப்பதும் நியாயமன்று; நமது முன்னோர்கள் கோயில்கள் மடங்களுக்கு என்று கொடுத்த பொருட்களை எவ்வளவு சிலாக்கியமான வழிகளாயினும் வேறு வழிகளில் செலவிட யாருக்கு அதிகாரமுண்டு? இவ்விதமான நியாயமற்ற அதிகாரங்களை கம்மிட்டிகளுக்கும் சர்க்காருக்கும் கொடுக்கவேண்டுமென்று இந்தப் புதிய மசோதாவில் இருப்பதை உடனே மாற்றச்செய்வது பொது ஜனங்களின் முதற் கடமையாகும்.

(2) தரும சொத்துக்களை யாரைக் கொண்டு மேற்பார்வையிடச் செய்யவேண்டும்? என்றால்: ஒவ்வொரு ஹிந்துவுக்கும் தன் சொந்த ஊரிலும் குடியிருக்கும் ஊரிலும் தான் வழிபடக்கூடிய கோயிலையும் தன்மீது ஆதீனங்கொண்ட மடத்தையும் மேற்பார்வை பார்க்க அதிகாரமிருப்பதுதான் பொருத்தமாகும்; பிறர் இவைகளிற் தலையிடுவது பொருந்தாது. ஒவ்வொரு கோயிலையும் மடத்தையும் தனித்தனியே பிரித்து அவற்றிற்கு மேற்சொன்னவர்களே மேற்பார்வையிடத் தகுந்தவர் என்று ஜாபிதா செய்து அவர்களுள் கம்மிட்டி ஒன்று தேர்ந்தெடுக்கச்செய்வது தான் சரி. ஆகவே, இது விஷயமாய், இந்த மசோதாவில் கோயில்கள் மடங்களைத் தனித் தனியாகப் பிரிக்காமல் எல்லாரையும் சேர்த்து ஓட்டர்களாக்கி கம்மிட்டிகள் நியமிப்பதென்று இருக்கும் ஷரத்துகள் சரியல்ல; அப்படிச்செய்வது பெரும் பிசகு என்று எடுத்துக் காட்டவேண்டும்.

(3) நாட்டில் நடந்து வரும் தருமங்களை நிலைநிறுத்துவது அரசாங்கத்தாரின் கடமையாயினும் மத விஷயங்களில் பக்ஷபாதமின்றி நடப்பதும் அவர் கடமை யன்றோ? இதுபற்றி யன்றோ 'மத விஷயங்களில் சுயேச்சைப்படி யிருக்கலாம்; காங்

கள் தலையிடமாட்டோம்' என்று இராணியார்
கால முதல் அரசாங்கத்தார் பறையறைந்திருக்கின்
றனர். ஆதலின், மத விஷயமாய்க் கொடுக்கப்
பட்ட தருமசொத்துகள் பழுதுபட வொட்டா
மல் பாதுகாப்பதற்கு வேண்டிய ஷரத்துகள் மட்
டுமே இப்புதிய மசோதாவில் இருக்கவேண்டும் ;
ஹிந்துக்களைமட்டுமல்ல, இதர மதஸ்தர்களையும்
இந்தச் சட்டத்திற்குள்ளாக்கவேண்டும். ஹிந்துக்
களுக்கு மட்டுமென்று ஒரு சட்டம் பிறப்பிப்பா
னேன். வேறு மதக்கோயில்களுக்கும் மடங்களுக்
கும் சொத்துகள் இல்லையோ? அவைகளையும்
சரிவா பரிபாலிப்பதும் துரைத்தனமல்லவோ ?
மேலும், இந்தச் சட்டத்தில் உள்ளூர் கவர்ன்
மெண்டுக்கும் மற்ற சர்க்கார் உத்தியோகஸ்தருக்
கும் பல விஷயங்களில் அதிகாரங்கள் கொடுத்தி
ருப்பது யுக்தமல்ல. அவர்கள் வேறு மதஸ்தரா
யிருக்கலாம். அவர்கள் கொள்கைகள் தர்ம மேற்
படுத்தியவர்களின் கொள்கைகளோடு முரண்பட
லாம். ஆகவே, ஏற்படுத்தப்பட்டபடி விதிகளின்
பிரகாரம் ஓட்டர்களின் ஜாபிதாக்களைத் தயாரித்
தல், கேஸுகளை தீர்மானித்தல், கணக்குகளைச் சரி
பார்த்தல் முதலியவையான சொந்த அபிப்பிராய
தோஷங்களுக்கு இடங்கொடாத காரியங்களில்
மட்டுமே இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தல்
தகும். மற்ற விஷயங்களை யெல்லாம் ஓட்டர்க
ளிடமும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்
மிட்டிகளிடமுமே விட்டுவிடவேண்டும்; என்ற
விஷயத்தை சட்ட சபையாருக்கு விளங்கச்செய்ய
வேண்டும். முடிவில், ஹிந்துமத சொத்துக்களைப்
பாதுகாக்க முயலுவதோடு இராமல் இந்த சட்டத்
தை பிற மதஸ்தருக்கும் உபயோகமாகும்படி
செய்விக்கவேண்டும் ; எந்த சட்டத்தைக்கொண்
டும் ஒரு தருமத்திற்கென்று கொடுக்கப்பட்ட
சொத்துக்களை அத்துடன் சம்பந்தமில்லாத
வேறு தருமத்திற்கோ லௌகிக நன்மைக்
காகவோ செலவிடுதல் சரியல்ல ; அரசாங்
கத்தாருக்கும் , சர்க்கார் உத்தியோகஸ்தர்
களுக்கும் இவ்விஷயங்களில் அதிகாரம் கொடுப்
பது பிசகு; எல்லாவிதமான தரும சொத்துகளை
யும் ஒன்றாக்கி அவற்றை பரிபாலிப்பதற்கு பல
வகைப்பட்ட கொள்கைகளைக் கொண்ட வகுப்பார்
களையும் ஹிந்துக்கள் என்று ஒன்றுசேர்த்து
அவர்களுடைய ஓட்டுகளைக் கொண்டு கம்மிட்டி
களை ஸ்தாபிப்பது முற்றும் தவறுதலான காரியம்.
இவ்விதமான பிசகுகளை யெல்லாம் நன்காராய்
ந்து ஷைமசோதாவின் ஷரத்துகளை மாற்றச்செய்
யாவிட்டால் மத விஷயமான சொத்துகளை வேறு
வழிகளில் திருப்பிய பெருங் குற்றத்திற்கும் பாபத்
திற்கும் ஆளாவோம்; தருமவிஷயங்களுக்கு இனி
சொத்துக்களை கொடுக்க வொட்டாமல் தடுப்பதற்
கும் இது ஒரு ஹேதுவாகும்; சொத்துக்களை
துர் விநியோகப்படுத்தாதபடி தடுக்க நாம் முய
லும் இம்முயற்சியும் பயன்படாது; கமிட்டிகளி
லும் வேறு இடங்களிலும் சண்டை சச்ச
ரவுகளும் அதிகமாகும் ; ஆகையால் ஷை
மசோதாவிலுள்ள ஷரத்துக்களை நன்காராய்ந்து
தகாதவற்றை நீக்கினாலொழிய இதைச் சட்ட
மாக்குவது பெருங்கேடு விளைப்பதாகும்; என்ற
வற்றை யெல்லாம் ஆங்காங்கு பொது ஜனக் கூட்
டங்கள் கூடி சட்டசபையாருக்கும் மசோதாக்
கம்மிட்டியாருக்கும் தெளிவுறத் தெரிவிப்பது உட
னே நாம் செய்து முடிக்க வேண்டிய காரியம்.
இதில் பிராமணர், பிராமணரல்லாதவர் என்ற கக்ஷி
க்கு இடமில்லை. பிராமணரல்லாதவரே தரும
விஷயங்களில் அதிக சிரத்தை யுடையவராகவும்
தருமங்களுக்கு சொத்துகள் கொடுப்போராகவும்
இருக்கின்றனர்; அவர்களே இப்பொழுது துரைத்
தனத்திலும் செல்வாக்குடையவர்களாயிருந்த
லால் இதற்கும் அவர்கள் தாம் முன்வருதல் பொ
ருந்தும்.

காலத்தின் கொடுமை

[காஞ்சன குமார்]

இயற்கையை அணியாய்க்கொண்ட இந்தியாதேசம் மலைகளை மாலையாய் கொண்டது. பாவத்தைப் போக்கும் புண்ணிய நதிகள் கவியப்பெற்றது. அழகமர் சோலைக ளமையப்பெற்றது. அழிதரு ஆக்கையை நினைப்பு மூட்டவே, செஞ்சுடராழியான் திருக்கோயில்கள் நிறையப்பெற்றது. வானவர் நாடு வழிதிறந்திடச்செயும் இன்னிசை கானமும், மாதர்களணியும் தங்கவணியும், ஒலிக்குஞ் சிலம்பும், அரிய கலையும், முத்துச்சிவிகையும், பீதாம்பரமும், கண்களைக் கவரும் செம்பொற்சிலையும், சிலந்தியின் நூலை இரண்டாய் பிளக்கும் கூரிய கத்தியும், கரி இரும்பினால் திட்டமாய்ச் செய்த பெரிய பீரங்கியும், ரசாயனமுறையில் தேர்ச்சிபெற்ற வித விதமான உலோகவேலையும் சொல்விமுடியாத உன்னத நிலையில் இருந்தன.

தொழுகுல முதித்துக் கைம்மாறு கருதாது உலகத்துழைப்பதே தகுதியென்றோரும், வெற்றிக்கொடியை நாட்டி வைப்போரும், வியாபாரத்தை ஒழுங்குற நடத்தி லாபம்பெற்ற வணிகரிற் சிலரும், உயிரைத்தாங்கும் பயிருக்கெல்லாம் கொண்டல் வண்டலே குணமெனக்கொண்டு ஆற்றின்பெருக்கையே அனுதினம் நாடிய ஒப்புறவொழுகும் உழவர் பலரும் குழுமியிருந்தனர்.

நமது இந்தியத்தாயோ கன்னலுங் கதலியும் கலந்து ஊட்டினாள். நாம் செல்லப்பிள்ளையாய்க் கொஞ்சிக் குலாவினோம். ஸத்துவகுணமே ஸத்தியமென்றோம். சாந்தமும் சீலமும் ஓங்கி வளர்ந்தது.

இப்படியிருந்த இந்நாளில், மேனாட்டவர்கள் இயற்கையோடு முரண்டினாலன்றி பிழைப்பதற்கு வழியுமின்றி, வர்த்தக வேடம்பூண்டு நம்மிடஞ் சேரலாயினர். சரண் புகுந்தவர்களைக் காப்பதே ஆரிய தர்மமென அவர்களைச் சிரமேற்கொண்டு காப்பாற்றி உறவாடினோம். இதற்கு மாறாக நமக்கு இச்சகம்பேசி வஞ்சகஞ்செய்தனர். பொய்யுரைகளை மெய்யெனக் கொண்டோம். அறனை மறந்தோம்; அடிமாண்டு போனோம்.

ஒரு காலத்தில் உலகிற்கெல்லாம் ஒளியையும், ஒப்புயர்வில்லாச் சரக்கையுமுதவிய நாம் வேண்டுவனவைகளைவிட்டு வேண்டாதனவைகளில் நாட்டம் வைத்தோம். கல்வியும் கேள்வியும் தக்கார் சேர்க்கையும் நம்மை விட்டகன்றன. காலத்தின் கதியை அறிந்தார் யார்! உறுதியும் ஊக்கமும் ஒளிந்துகொண்டது. ஆண்மையும் உண்மையும் ஓடிப்பறந்தது. பொறுமையும் தன்மதிப்பும் தடுமாறலாச்சுது. சோற்றை விற்றோம், சாராயம் பெற்றோம். பஞ்சைக் கொடுத்தோம், ஆடையை அடைந்தோம். விளக்கெண்ணெயை விட்டோம், மண்ணெண்ணெயைக் கொண்டோம். அவலைக் கொடுத்து உமியை வாங்கிய கதை போலாச்சுது

நம் பிழைப்பு. இதுதான் கீழ்நாட்டார் மேனாட்டு நாகரிகத்தில் மோதிக்கொண்ட விமரிசை!

நிற்க, நமது கைத்தொழிலும் வர்த்தகமும் பாழடையவேண்டி மேனாட்டவர்கள் கையாண்ட முறைகள் அருவருப்பையும் ஆற்றொணாத்துயரையும் அடிக்கடி விளைவிக்கின்றன. இதுகாரணமாக நெற்றிவேர்வை நிலத்தில் விழுந்தும் பசியால் களைப்படைந்து கண்குழிந்து நடைப்பிணமாய்த் திரிபவர் பலர். "மேலே கடனிருப்ப வேண்டுமோ ஊனுறக்க" மெனச் சிந்தையிலாழ்ந்து கந்தையை யுடுத்து நல்குரவினால் நலிந்து திரிந்து வணிகர் சிலராயினர்.

எனினும்,

"பழையன கழிதலும் புதியனபுகுதலும்
வழுவல கால வகையினானே"

என்ற உண்மையை நாம் உணர்ந்தவராகையால் செல்வமோ மாறக்கூடியது, சத்தியமே ஜெயந்தரக்கூடியது, என்று பொறுமையே நமது பிறப்புரிமை யென்றுயிர் வாழலாயினோம்.

உலகத்தில் ஒவ்வொருதேசமும் ஒரே உடலின் பல்வேறு உறுப்புகளென்ற உண்மையை யுணராது, மதங்கொண்டு நடத்திய மகா யுத்தமானது, மயக்குண்ட நம்மை அடிமைப்படுத்திய எண்ணங்கள் மாறுபடுவதற்கு தூண்டுகோல் போலாயிற்று. சிலரின் கர்வம் குலைந்தது. நம்மவரின் தூக்கம் துலைந்தது. இனியேனும் உய்யும் வழியை நாடி உழைப்போமென்று உண்மைத்தொண்டர் தலையெடுக்கும் நாளில், பட்டமும் பதவியும் திட்டமாய்ப்பெற்று, தில்லும் பில்லும் தினமுங்கூறி, மதியிழந்து வாயிழந்து, 'பெயரும் புகழும் புண்ணியங் கொண்டீர், சீரும் சிறப்பும் செல்வமும் பெற்றீர்' என ஏழைக்குடிகளுக்குப் போலி நியாயங்களைக் கூசாமல் கூறும் கயவர்கள் செயலை என்னென்றுரைப்பது. ஆகவே, இனி நாம் முன்னேற்ற மென்னும் துறைமுகத்தை நாடி, உண்மை யென்னும் தோணியேறி, நம்பிக்கை யென்னும் மாலுமிபற்றி, ஒழுக்க மென்னும் சரக்கையேற்றி விடாமுயற்சி யென்னும் துடுப்புகளினால், தற்கால வாழ்க்கை என்னும் கடலைத் தாண்ட முற்படுவோமானால், காலக்கிரமத்தில் நமக்குக் குறைவற்ற செல்வமும் நோயற்ற வாழ்வும் ஆண்டவனருளால் வேண்டியபடியே அடைவோமென்பதிற் கையமில்லை.

அரசாங்கக் கடன்கள்

[R. பஞ்சாபகேசன்]

இக்காலத்தில் எல்லா தேசங்களிலும் ராஜ்யக் கடன்கள் பெருகி, அரசாங்கங்களே பெருங்கடனாளிகளாக இருந்து வருகின்றன. பிரஜைகளிடமிருந்து வசூலிக்கப்படும் வரிகளில் பெரும் பாகம் இக்கடன்களுக்கு வட்டி கொடுக்க உபயோகப்படுகிறது. ஆயினும் ஏராளமான கடன்கள் பட்டிருக்கும் பல ராஜ்யங்கள் உயர்நிலையிலிருப்பனவாகக் கருதப்படுகின்றன. இது எவ்வாறாகுமெனப் பலர் வினவுகின்றனர். மனிதர்களுள் கடன்படாது ஜீவிக்கும் வாழ்வே உயர்ந்ததெனப் போற்றி வருகின்றனர். கடன் அடிமைத்தனத்திற்குக் காரணமாகின்றதெனக் கொண்டு அதை இகழலாயினர்; ஆயினும் கடன் வாங்காமல் பெருந்தொழிலையோ காரியங்களையோ யாரும் செய்ய முடியாது. அரசாங்கமும் ஓர் பெரும் தொழிலைச் செய்யும் தொழிலாளிபோன்றதே. தேச முன்னேற்றத்திற்குரிய எத்தொழிலையும் விருத்திசெய்ய வேண்டுமென்ற நோக்கமுடையவர்கள் தொழிலபிவிருத்தியின் நிமித்தம் ஓர் வரையறைக் குட்பட்டுக் கடன் வாங்குவதற்குற்ற வசதிகளைச் செய்வதில் பின் வாங்கலாகாது. எக்காலத்திலும் கடன் கொடுத்துதவியவர்கட்கு வட்டியைத் தவறாமல் செலுத்தக்கூடிய எத்தொழிலையும் ஆதரித்து வரலாம்.

இவ்விதமே அரசாங்கமும் பற்பல தேச ஸேவையைச்செய்து வருவதற்கென ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சில காரியங்களால் அந்தந்த காலத்திலிருக்கும் பிரஜைகளே பலனடைந்து வருகிறார்கள். இக்காரியங்களுக்காக வரிகள் விதித்தே செலவைச் செய்யவேண்டும். சில காரியங்களால் அந்தக் காலத்தில் இருக்கும் பிரஜைகள் மட்டுமல்ல பிற்காலத்துப் பிரஜைகளும் பலனடைகிறார்கள். உதாரணமாக, பல சாலைகள் (Roads) நிர்மாணிப்பதால் பிரஜைகளுக்கு சௌகரியங்கள் ஏற்படுகின்றன. இவ்வேலைக்கு ஏராளமான திரவியம் வேண்டும். இவ்வேலையின் பலனை சாலைகள் நிர்மாணிக்குங் காலத்தில் இருந்த பிரஜைகளும் பிற்காலத்திய பிரஜைகளும் சௌகரியமாகப்பெற்று வருகிறார்கள். ஆகையால் பிற்காலத்துப் பிரஜைகளையும் வரிவிதிக்கக் கருதி உபாயங்களைத் தேடினார்கள். சாலைகள் நிர்மாணிக்க உபயோகப்படும் திரவியத்தை பிரஜைகளிடமிருந்தே கடனாக வாங்கி அதற்கு வட்டியாக வருஷா வருஷம் கிடைக்கும் வரி வசூலிலிருந்து எடுத்துக் கொடுத்து வரத் துவங்கினார்கள். இவ்வாறாக பெரும் திரவியம் செலவுசெய்து நீடித்த காலம் உபயோகமாகிற சௌகரியங்களைச் செய்ய நோக்கங் கொண்டு உழைக்கும் அரசாங்கம் கடன் வாங்குவதில் யார் குறை கூறலாம். பல தேசங்களில் ரயில்வே, முதலான பல வேறு பொதுநன்மைத் தொழில்களை அரசாங்கங்களே ஏற்று நிருவகித்துக் கொண்டிருக்கின்றன. ரயில்வே முதலிய சில தொழில்களில் ஏராளமான செலவுசெய்தும் துவக்கத்தில் செலவுக்கேற்றவாறு ஊதியங் கிடைப்பதில்லை. ஆகையால் ஸாதாரண முதலாளிகள் இத்தொழிலைக் கைக்கொள்ளுவதில்லை. ஆயினும் தேச நன்மைக்காக ரயில்வே நிர்மாணமாக வேண்டுமென யாவரும் ஒப்புவார்கள். இதை ஏற்று நடத்த பெருந்தொழிலாளியாகிய அரசாங்கமே தகுதியானது.

அரசாங்கம் கடன்வாங்க முற்படும்போது கவனிக்க வேண்டியது யாதெனில், யாதாயினும் நீடித்த நன்மையைச் செய்யும் ஓர் காரியத்தில் தாங்கள் வாங்கும் கடனைச் செலவுசெய்ய வேண்டுமென்பதே. இஃதல்லாமல் இராஜ்ய பாரத்தின் சாதாரண கடமைகளைச் செலுத்துவதற்குப் போதுமான வரி வருமானம் காணாமல் கடனாக வாங்குவது தங்களுடைய மதிப்பை யிழப்பதாகும். அதிகாரிகளுக்கு இவ்வித தவறான முறைகளில் புத்தி செல்லுமென்றே அரசாங்கக் கடனை வெறுக்கின்றனர் சிலர்.

அரசாங்கக் கடனுக்கு வட்டி செலுத்துவதால் வரி அதிகமாக விதிக்க வேண்டிருயிக்கின்றது எனவும், சாமான்களின் விலையேறி யிருக்கிறதெனவும் குறைகூறி, திரவியம் சேகரித்து முதலாளிகளாக விளங்குமவர்களிடம் அரசாங்கக்கடன்களையெல்லாம் பங்கிட்டு விடவேண்டும் என முறையிடும் மனிதர்கள் அறிவீனத்தால் இவ்வாறு செய்கிறார்கள். திரவியம் சேர்த்துக் கைத்தொழில்களை நடத்தி தேச நிலையை உயர்த்தும் முதலாளிகளுக்கு தாங்கள் சேமித்து வைத்த பொருளை பிறர் கவராதவாறு ரட்சித்தாலன்றி நாட்டின் நன்மையைத்தேடியதாகாது.

மனோன்மணீய வசனம்: ஜீவகன்

[S. வையாபுரி பிள்ளை, B. A., B. L.]

முன்னொரு காலத்தில் பாண்டியநாட்டிலே மதுரைமாநகரில் ஜீவகன் என்ற பாண்டிய னொருவன் அரசு புரிந்து வந்தான். இவன் உத்தம ஒழுக்கமுடையவன்; கல்வி கேள்விகளிற் சிறந்தவன்; பளிங்கு போலக் களங்கமற்ற நெஞ்சினன். நெறிமுறை தவறாமல் இவன் செங்கோல் செலுத்தி வந்ததனாலே இவன்மீது குடி ஜனங்கள் மிக்க அன்பு பூண்டொழுகி வந்தார்கள்.

இவ் அரசனுக்கு நெடுங்காலம் புத்திரப்பேறு உண்டாகவில்லை. செல்வம் முதலியவற்றால் யாதொரு குறைபாடும் இல்லாத போதிலும், பிள்ளையில்லாத வறுமையினால் அரசன் பெரிதும் நைந்து வருந்தினான். தானதருமங்கள் பலவும் செய்தான். எனினும் அவனது விருப்பம் நிறைவேறவில்லை.

அரசனுடைய குலகுரு சுந்தரமுனிவர் என்றொருவர் இருந்தார். இவர் தமது அருமைச் சிஷ்யனை வருத்திக் கொண்டிருந்த கவலையை அறிந்து, அதனை நீக்குதற்குரிய உபாயத்தைச் சிந்தித்து யாகம் ஒன்று செய்து முடிக்கத் தீர்மானித்தார். வேண்டும் பொருள்களெல்லாம் ஆயத்தமானதும், மிக்க சிறப்போடு யாகம் நிறைவேறியது. அரசனது பிரிய பத்தினியும் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்துத் தனது நாயகனுடைய மனப் பிணியை மாற்றினாள். குழந்தைக்கு மனோன்மணி எனப் பெயரிடப்பட்டது. ஆனால் சிறிது காலத்திற்குள், தனது செல்வப் புதல்வியின் செல்வ வாழ்க்கையைக் கண்டு ஆநந்திக்கக் கொடுத்துவைக்காமல் தாய் மரணமடைந்து விட்டாள். ஜீவகனே இப்பொழுது தன் மகளுக்குத் தாயும் தந்தையும் ஆயினான்.

மனோன்மணி நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து நவயௌவன பருவத்தை அடைந்தாள். லக்ஷ்மியோ என்று கண்டோர் அதிசயிக்கும்படியான பேரழகும், ஸரஸ்வதியோ என்று பழகினோர் கொண்டாடும்படியான புத்திசாமர்த்தியமும் வாய்ந்து விளங்கினாள். லோகமாதாவாகிய பார்வதியே இவளென்று யாவரும் பக்தி கூறும்படி கருணை ததும்பிய மனமுடையவளா யிருந்தாள். அவள் அன்பின் களஞ்சியம்; அழகின் அரசிருக்கை. பாற்கடலிலே சந்திரோதயம் நிகழ்ந்தது போலப் பாண்டிய வம்சம் இப்பெண்மணியால் விளங்கித் திகழ்வதாயிற்று. இவளது குணாதிசயங்களைப் பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்தாதவர் ஒருவருமிலர். முற்றத்துறந்த முனிவர்கள் கூட இவளிடம் ஆராத அன்பு பூண்டிருந்தார்கள். ஒரு சமயம் சுந்தரர் ஒரு யாகம் செய்து கொண்டிருந்தார். யாக அக்னி தழைத் தோங்காது மங்கிக் கொண்டே யிருந்தது. வந்திருந்த முனிவர்களெல்லாரும் பிரார்த்தனையோடு அவிசு சொரிந்தார்கள். அக்னி தழைக்கவில்லை. அரசன் முதலிய யாவரும் யாது பிழை நேர்ந்ததோவெனக் கலக்கமுற்றிருந்தார்கள். அப்பொழுது பக்கத்தில் நின்று கொண்டிருந்த மனோன்மணிச் செல்வி விளையாட்டாக அவிசு நெய் யெடுத்து யாக குண்டத்தில் சிறிது கொட்டினாள். உடனே அக்னி பொங்கியெழுந்து முனிவர்களுக் கெல்லாம் மிக்க மகிழ்ச்சியை விளைவித்தது. அன்று முதல் சுந்தரமுனிவர் முதலிய பெருந் துறவிகள் மனோன்மணியைத் தங்கள் தலையில் அணிந்து கொள்ளும் சிரோமணியாகப் பாவித்து வந்தார்கள்.

ஆனால் பாண்டிய நாட்டில் ஒருவன் மாத்திரம் மனோன்மணியின் நன்மையை விரும்பாதவனாயிருந்தான். அவன் யாரெனில் ஜீவக அரசனது மந்திரியாகிய குடிலனே யாம். பொல்லாத வஞ்சகன்; சூதே உருவெடுத்து வந்தது போலுள்ளவன்; தன்னை யன்றி வேறொன்றனையும் கருதாதவன்; ஆனால் முற்றும் நல்லவன் போலவே எப்பொழுதும் நடிப்பவன்; தனது வஞ்சகக் கருத்தை மறைப்பதற்கென்றே தான் கற்ற கல்வியனைத்தையும் எடுத்து எடுத்து விளம்புவன். அதிபுத்திசாலி; அதிதந்திரசாலி.

இம்மந்திரி அரசனுக்கு மிகவும் உண்மையுள்ளவன்போல நடந்து அவனை யெளிதிலே தன் வசப்படுத்திக் கொண்டான். நாளடைவில் குடிலன் சொல்லன்றி வேறொருவர் சொல்லும் ஜீவகனது செவியில் ஏறுவதில்லை யென்றாயிற்று. மதுரை நகர் வாசிகள் குடிலனது வஞ்சனையை ஏற்கனவே அறிந்திருந்தார்கள். இப்பொழுது முற்றிலும் மந்திரி வசப்பட்டொழிந்தான் மன்னனென்பது தெரிந்ததும், தங்கள் மனோன்மணித் தாய்க்கும் தங்கள் நாட்டிற்கும் ஏழை யரசனுக்கும் யாது நேரிடுமோ என்று பெரிதுங் கவலை யடைந்தார்கள். ஜீவகன் மீது பரிவும் குடிலன் மீது வெறுப்பும் நாட்டில் அதிகரிக்கத் தொடங்கின.

ஜனங்கள் தனது உட்கருத்தைத் தெரிந்து தன்னை வெறுக்கிறார்கள் என்பதைக் குடிலனறியாதிருப்பவன்! இனிமேல், தன் மனம் போனபடி யெல்லாம் அரசனை யாட்டித் தனது செல்வத்தையும் செல்வாக்கையும் வளர்த்துக் கொள்ள பரம்பரை ராஜதானியாகிய மதுரை இடங்கொடாதென நன்றாக உணர்ந்தான். அரசனை வேறொரு தலை நகர்க்கு அழைத்துச் செல்லுதலே தக்கதென்று தெரிந்து அவ்வண்ணம் தீர்மானித்தான். இவ்வுத்தேசத்தோடு மதுரை நகர் வாசிகளைக் குறித்துப் புற்பல தூஷணைகள் அரசனிடம் சொல்லி அந் நகரை அவன் வெறுக்கும்படி செய்தான். இதுவுமன்றி வேறொரு மந்திரோபதேசமும் நடந்தது. ஜீவகனது உள்ளத்தின் அடிப்படையில் வேரூன்றிக் கிடந்த ஆசை யொன்று உண்டு. என்றும் அழியாப் பெரும் புகழ் தனக்குத் தேடிக் கொள்ள வேண்டுமென்பது தான் அது. இதனை நன்குணர்ந்த குடிலன் புதிதாயொரு தலை நகரமைத்துப் புதிய கோட்டை முதலியன இயற்றி புதிய அரசியல் நெறியைக் கைக் கொண்டால், அரசனது பெயர் உலக முள்ளளவும் நிலைநிற்க வல்லதாகும் என்று அவனுக்கு அடிக்கடி வற்புறுத்தி அவனது ஆசையை வளர்த்தான். இந்த ஆசை வார்த்தையில் ஜீவகன் மயங்கி யொழிந்தான்; வேறொரு நகரை இராஜதானியாக்க உடன்பட்டான். திருநெல்வேலியே தக்க தலைநகரென நிச்சயிக்கப்பட்டது.

அரசன் தனது செல்வப் புதல்வியோடும், குடிலன் தன் மகனாகிய பலதேவனோடும் திருநெல்வேலிக்குப் போய்ச் சேர்ந்தார்கள். மனோன்மணியின் தோழியாகிய வாணியும் இவள் பிதாவாகிய சகடர் என்ற பிரபுவும் உடன் சென்றார்கள். அரசனது உண்மைச் சிநேகிதனாகிய நாராயணன் என்பவனும் பிரிவாற்றாது நெல்லை சென்றடைந்தான். புதிய தலைநகரில் கோட்டை முதலியன வெல்லாம் குடிலனது நோக்கப்படியே அமைக்கப் பட்டன.

தேக சௌக்கியமும் ஆகாரமும்

[V. பாலஸுந்தரம், B. A., B. L.]

தற்காலத்தில் மானிடப் பிறவிகள் எங்கும் பல பிணிகளுக்கு ஆளாகி வருந்தக் காண்கிறோம். வைத்தியத் தொழில் புரிவோர் களிப்புற்றுப் பெருகிவருகிறார்கள். ஒரு மனிதன் நோயுற்றால், அந்நோய் எக்காரணத்தால் உண்டாயது இனி அஃது தன்னை யணுகாமலிருக்க யாது செய்தல் வேண்டும் எனச் சிந்திப்பதில்லை. இரண்டு டாக்டர்களுக்கு நான்கு டாக்டர்களை வரவழைத்து அவர்களிடம் சிகிச்சை பெற்றுவிட்டால், உடலைக் காப்பாற்ற மனிதனால் இயன்றதைச் செய்து விட்டதாகக் கருதி, பின் தெய்வ ஸங்கல்பம் போல் ஆகுமெனக் கைவிட்டுவிடுகிறான். நோய் மேலிட்டால் டாக்டர் கைதேர்ந்தவரல்லர் என வெண்ணுகிறான். இவ்விஷயங்களை ஆராய்ந்து சீர் தூக்கின், அறிவீனமே இவைகளுக் கெல்லாம் காரணமெனப் புலப்படும்.

நம் உடலைப் பிணிவழி படாதவாறு காப்பாற்ற வேண்டுமாயின், நமது ஆகார முறைகளில் நாம் வெகுவாய் கவனம் செலுத்த வேண்டும். சிலர் போஜனத்திற்கு பூஜையென்று பரிபாஷையிட்டுக் கூறுவதுண்டு. அதன் பொருளாவது, சரீரம் ஓர் கோயிலாகவும், இதை ஒழுங்கான நிலையில் நிறுத்துவதற்கு உதவும் உணவே பூஜையாகவும் பாவிக்கின்றனர். ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த சரீரமாய கோயிலைக் காத்து வளர்ப்பதே முதற் கடமை. இக்கடமையைச் செய்தபின்னரே தர்ம அர்த்த,காம, மோக்ஷமாகிய நான்கு வித ஜீவிய புருஷார்த்தங்களில் மனது ஈடுபடக்கூடும். அதன் பொருட்டு சுவை பொருந்தி இனிது பக்குவப் படுத்திய உணவை வேளை தவறாது அளவிலே புசிக்கவேண்டும். பக்குவப்படாத உணவை யுட் கொண்டால், ஜீரண உறுப்புக்கள் தங்கள் வேலைகளை ஒழுங்குறச் செய்ய வலிமையற்று மனிதன் நோய்வாய்ப்பட நேரிடும். அளவுக்கு மிஞ்சிய அமுதமும் விஷமாகும் என்ற அனுபவமேற்கோளைப் பன்முறை கேட்டறிந்தும், பற்பல சமயங்களில் அளவுகடந்து புசித்து விட்டு, மறு போஜன வேளையில் 'வயிறு கனக்கின்றது' எனச் சொல்லிப் பட்டினிபோகும் ஒட்டகை போன்ற மனிதர் பலர் உண்டு. அளவுக்கு மீறி புசித்தலாலேயே பிணியாளர் பெரும்பாலரும் வருந்துகிறார் களென வைத்திய சாஸ்திர அறிஞர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

நாம் உண்ணும் பல உணவுபொருட்களின் குணங்களையும் உபயோகங்களையும் நன்றாய் அறிந்துகொள்ளவேண்டும். தேகத்தைப் போஷிக்கத் தக்கதும் அங்கங்கள் அவைகளின் தொழிலை ஒழுங்கு பெற நடத்திவர உதவிபுரியும் ஆகாரத்தையே நாம் கைக்கொள்ள வேண்டும். தவிர, காலத்திற் கேற்றவாறு அதாவது ருதுக்கள் மாறு படும்போது நம் ஆகாரவகைகளும் சிறிது மாறு படவேண்டும். இவ்வுண்மைகளை யறியாமல் ஜனங்கள் பல கஷ்டங்களுக்கு உட்படுகின்றனர். காபி, டீ, முதலான பானங்களை உபயோகித்து தங்கள் உடலை நாசமாக்கிக் கொள்வதை அறியாதார் இல்லை. ஆயினும் பலர் உட்கொள்ளுகிறார் களே என்று மட்டும் கண்டு குணாகுணங்களைத் தெரிந்து கொள்ளாமல் இவைகளைப் பின் பற்றும் மனிதர் சிலர்.

இவ்வாறுய தத்துவங்களையும் சுகாதார விஷயங்களையும் வைத்திய சாஸ்திர அறிவாளிகள் பாமர ஜனங்கள் எளிதில் அறியுமாறு வெளியிட்டு வந்தால், உலகத்திற்குப் பேருபகாரம் செய்வதாகும். நாமும் அனுபவத்தாலும் வைத்தியர்களைக் கேட்டும் இவ்விஷயங்களை யறிந்து பின் பற்றினால் நோயாளியாகாமல் நீடித்த சுகவாழ்வை யடையலாம்.

கட்டடக் குறிப்புகள்

(B. ராமஸ்வாமி)

"கட்டடத்தைக் கட்டிப்பார், கல்யாணத்தைப் பண்ணிப்பார்" என்ற வசனத்தை நாம் அடிக்கடி கேழ்விப்படுகிறோம். அதாவது ஒருவன் கைப் பொருளைக் கொண்டு தகுந்தபடி கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்குள் அவனுக்கு ஏற்படும் கஷ்டத்தைக் குறிப்பிடுகிறது.

உலகத்தில் சாதாரணமாய் ஒவ்வொருவனும் தனக்கு என்று ஒரு வசதியான வீட்டை அல்லது பங்களாவை கட்டிமுடித்துக்கொள்வது மிகச் சுலபமான காரியமென்றும் அதற்கு தன்னுடைய சொந்த யுக்தியும் அனுபவமும் போதுமென்று மதித்துக்கொள்ளுகிறான். மற்ற விஷயங்களில் மதியூகியாயிருந்தாலும் கட்டடங்கட்டி முடிப்பதற்கு வேண்டிய அனுபவம் இருப்பது அரிது. இந்த நிலைமையில் ஒருவனுக்கு வீடு வேண்டுமென்ற எண்ணமுண்டானவுடன் அண்டை அயல் வீடுகளைக் கட்டின வேலைத்தலைவன் (Maistry) இன்னானென்பதைத்தெரிந்துகொள்ளுகிறான். அவனைக் கூப்பிட்டனுப்புகிறான். அவனிடம் தன் உத்தேசத்தைத் தெரிவிக்கிறான். கட்டடத்திற்கென்று சேமித்து வைத்திருக்கும் தொகையின் மதிப்பைக் குறிப்பிடுகிறான். கட்டடம் முடிய வேண்டிய கால அளவை சொல்லுகிறான். கட்டடத்தின் விஸ்தீரணம்,தனக்குவேண்டிய அறைகள், எல்லாவற்றையும் சுமாராய்த்தெரிவித்து விடுகிறான். இத்தனை விவரங்களையும் சொல்லி முடிக்குமுன் "எஜமானே!" என்றும், "மகாப்பிரபு" என்றும், "அவசியந்தான்" என்றும், "தங்களைப்போல புத்திசாலியை நான் பார்த்ததேயில்லை" என்றும் அநேகப்பிரகாரமாய் இந்த வேலைத்தலைவன் ஸ்தோத்திரஞ் செய்கிறான். இத்துடன் நிற்காமல், தன் சாமர்த்தியத்தையும், தான் இதுவரை கட்டியிருக்கும் கட்டடங்களின் விமரிசைகளையும் தன்னிடத்தில் அனேகம் பிரபுக்களுக்குண்டாயிருக்கும் நன்மதிப்பையும், உண்மையாய் உழைப்பதில் தனக்கு மிஞ்சியவர்களே கிடையாதென்றும் வெகுவாய்த் தன்னைப்புகழ்ந்துகொள்ளுகிறான். மேற்குறிப்பிட்ட சம்பாஷணையினால் எஜமானனுக்கு மேஸ்திரியினிடம் பூரண விசுவாசம் பிறந்துவிடுகிறது. இனிமேல், கட்டடத்திற்குவேண்டிய சாமான்களைத் தயாரிப்பதில் எஜமானனுக்கு ஊக்கம் உண்டாகிறது. தனக்குள் தானே யோஜனை செய்கிறான். "நம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். வந்தவன் (மேஸ்திரி) நல்லவனாகவே காணப்படுகிறான். புத்திசாலி. நம்மிடம் அடங்கித்தான் நடப்பான். நம்மை எஜமானனென்றும், பிரபுவென்றும் தெரிந்து கொண்டிருக்கிறான்," என்று எண்ணிக்கொண்டு மேற்குறித்த கட்டடத்திற்குவேண்டிய துடைப்பம் முதல் தளவரிசையுள்பட எல்லாச்சாமான்களுக்கும் மேஸ்திரி மூலமாகவே அச்சாரம் (Advance) கொடுத்துவிடுகிறான். பணத்தைக்

கையில் வாங்கினவுடன் மேஸ்திரிக்கு அளவு கடந்த ஆனந்தம் உண்டாகிறது. "ஐயர் குடுமி அகப்பட்டுக்கொண்டது. இனி நம்முடைய இராஜ்ஜியந்தான்" என்று சன்னஞ்சன்னமாய் பணத்தைச் சாமான்களுக்கென்றும் கூலிகளுக்கென்றும் பறித்துவிடுகிறான். உலகத்தின் அனுபவத்தை நன்றாய்த்தெரிந்து கொண்டவனுகையால் "ஆடிக்கறக்கிறமாட்டை ஆடிக்கறப்பதற்கும் பாடிக்கறக்கிறமாட்டை பாடிக்கறப்பதற்கும்" துணிந்துவிடுகிறான். கட்டடம் பாதி முடிவதற்குள் கைப்பணம் செலவாகிவிடுகிறது. ஆரம்பிக்கும்போதிருந்த ஊக்கமும் உற்சாகமும் எஜமானனுக்குக் குறையத்தலைப்படுகிறது. மேஸ்திரியின் ஊழல்கள் தனக்குத் தெரிந்தும் அவனை விலக்கமுடியாதவனுயிருக்கிறான். "ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப்போல்" இவன் விழிக்கும்படி நேருகிறது. இதன் மத்தியில் அவனைச்சார்ந்தவர்களும் இதரர்களும் சொல்லுகிறபடியெல்லாம் கட்டடத்தை அலங்கரிக்க ஆரம்பிக்கிறான். 5000 ரூபாயில் ஆரம்பிவித்து சுமார் 12,000 ரூபாயில் முடிகிறது. ஒவ்வொரு சமயம் இந்த வீட்டின் பேரிலேயே கடன் வாங்கவும் நேருகிறது.

ஆகையால் என்னென்ன சாமான்களைக் கொண்டு வேலையைத்துவக்கலாம். சாமான்களின் குணகுணங்கள் என்ன. எந்த சாமான்களை எப்படிச்சேர்க்கவேணும், எந்த இடத்தில் சரசமான விலைக்குக் கிடைக்கும். வேலையாட்கள் எங்கே கிடைப்பார்கள் என்ற விஷயங்களை உயர்குடிப் பிறந்து உண்மையாய் உழைக்கக்கூடிய கற்றுத்தேர்ந்த இஞ்சினீர்கள் (Architects and Engineers) அனேகர் மூலமாயறிந்துகொள்ளலாம். இவர்கள் உதவியால் கட்டடங்கள் கட்டுவிப்பதே நலமாயிருக்கும்.

கொஞ்சநாளைக்குமுன் கிண்டி இஞ்சினீரிங் காலேஜில் (Engineering College) நடந்த பிரசங்கத்தில் மதராஸ் இஞ்சினீரான மேடலீ துரையவர்கள் (Mr. Madeley) சொன்ன சில வார்த்தைகளைமட்டும் குறிப்பிடுகிறேன். "நான் மதராஸுக்கு வந்து சாக்கடைகள் கட்டுவதில் ஊக்கம் எடுத்துக்கொண்ட நாளில் செங்கல் மாச்சுண்ணும்பினுல் (Portland Cement) கட்டினுல்தான் சாக்கடைகள் கெட்டியாய் நிற்குமென்ற தப்பெண்ணம் பரவியிருந்தது. அந்தக்காலத்தில் சாதாரண கல்சுண்ணும்பினுலும், கிளிஞ்சல் சுண்ணும்பினுலும் அனேகம் கலவைகள் (Mortar) சேர்த்துப்பரீக்ஷை செய்தேன். முடிவில் சிமிட்டி (Cement Mortar) க்கலவைகளில்லாமலேயே சாதாரணச் சுண்ணும்பின் உதவியால் மிகவும் உறுதியான வேலைகளை முடித்தேன். இதனுல் நகரபரிபாலன சங்கத்திற்கு (The Madras Corporation) அநேகாயிரம் ரூபாய்கள் லாபமாயின" வென்றார். ஆகையால் சுண்ணும்பு, மணல், செங்கல், ஓடு, மரம், இருப்புச்சாமான் முதலியவைகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்தறிந்தவர்களின் அனுபவத்தைக்கொண்டு கட்டினுல் கட்டடங்களை ஒழுங்காயும் லாபமாயும் கட்டிமுடிக்கலாம் என்பது திண்ணம்.

நமது தாய்மொழி

[ஊ. சா. வேங்கடராம ஐயர்]

உலகம் பல்வேறு நாடுகளாக அமைந்திருக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் உள்ளக் கருத்துக்களை ஒருவரோடொருவர் அளவளாவிக் கலந்துகொள்ள வேண்டியதும் இன்றியமையாததொன்றாம். ஆதலின், அம்முறையில் ஒவ்வொரு நாட்டினரும் தாம் தாம் நினைத்தவற்றையும், கண்டவற்றையும், அறிந்தவற்றையும் தத்தம் இயற்கைக்கும் அறிவுக்கும் நாகரிகத்திற்கும் ஏற்றவாறு ஒருவரோடொருவர் அளவளாவத் தக்க வகையில் தனித்தனி மொழிகளைப் படைத்துக்கொள்வாராயினர். அங்ஙனம் ஒவ்வொரு நாட்டினரும் படைத்துக் கொண்ட மொழியே அந்தந்த நாட்டினர்க்குத் தாய் மொழியாவது. இதனை நாட்டு மொழி, நிலத்து மொழி, தேச பாஷை என்றும் கூறுப. 'நாம் குழவிப் பருவந்தொட்டுப் பயின்று வந்தது; பாலோடு அருந்தி, சோறோடு அயின்று, துயிலோடு உறங்கியது; இன்பிலும் துன்பிலும் யாண்டும், என்றும் நம்மோடு பயில்வது' எனக் கூறிச் சிறப்பிப்பர் அறிஞர், வே. இராதாகிருஷ்ண பிள்ளை அவர்கள். 'தாய்மார்கள் இயல்பாகப் பேசும் மொழிகளே தாய்மொழிகளாம்' என்ற கருத்துப்பட ஓர் இடத்தில் வரைந்தருளினுர் மகாத்மா காந்தி அடிகளார்.

செந்தமிழாம் தெய்வமணங்கமழும் நமது தாய்மொழியோ பலவாயஅரிய கருத்துக்களையும் எளிய நடையில் எவர்க்கும் இனிது விளங்கும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றலை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றது என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அன்றியும் அது நமது பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களை மரபுநிலை திரியாது எவரையும் இனிது உணர்ந்து கொள்ளச் செய்ய வல்லதும், பிறமொழிகளுக்கில்லாத சில சிறப்புக்களுடன் கூடியதும் நவிலுந்தோறும் புதுப்புதுக் கருத்துக்களைத் தோற்றுவிப்பதும் ஆகிய தொல்காப்பியம் முதலிய பல சிறப்புபட்ட இலக்கண நூல்களையும், இயற்கையின் வனப்பை இற்றெனத்தெரிவிக்கத்தக்கனவும், பண்டைப்புலவர்கள் அரசர்கள் வீரர்கள் வள்ளல்கள் முதலாயினுருடைய அரிய சரித்திரங்களை வரலாற்று முறையுடன் அறியத் துணைசெய்யக் கூடியனவும் ஆகிய நற்றிணை பத்துப்பாட்டு முதலிய சங்கத்தொகை நூல்களையும்; விரிந்த பலவாய உயர்ந்த கருத்துக்களை மிகச் சுருங்கிய தொடர்மொழிகளால் எவர்க்கும் எளிதில் விளங்குமாறு எடுத்திடித்து உரைக்கவல்லதும், படிக்குந்தோறும் இன்பமூட்டிப் பண்படுத்தி உலகினருக்குப் பயன்படுமாறு படிப்போரைப் பக்குவப்படுத்தி வருவதும், வடமொழி ஆங்கிலம் முதலிய பல மொழியாளரும் மொழிபெயர்த்துக் கொள்ளும் பெருமையினைப் பெற்றதும், எம்மதத்தினரும் தம்மதத்தினது எனப் போற்றத்தக்க சமநோக்குள்ளதும் ஆகிய திருக்குறள் போன்ற பல நீதிநூல்களையும்; புதுப்புதுக் கற்பனைகள் நிறையப்பெற்ற சிந்தாமணி, இராமாவதாரம் போன்ற பல பெருங்காப்பியங்களையும்; உள்ளதை உள்ளவாறு கூறிக் கற்போரை இன்புறுத்தும் சிலப்பதிகாரம், தொண்டர் புராணம் போன்ற தனித்தமிழ்ச் சரிதநூல்களையும்; 'சிந்தைக்கினிய செவிக்கினிய' ஆகவும், 'வந்த இருவினைக்கு மாமருந்து' ஆகவும் உலகினரால் பெரிதும் போற்றப்படுவனவும், படிக்குந்தோறும் படிப்போரை உளங்கனிந்து நெக்குருகி மயி

ர்க்குச் செறிந்து ஆனந்தக் கண்ணீர் சொரியும் வண்ணம் செய்துவருவனவும், பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பெருக்கெடுத்து வெள்ளம் போல் ஓடுகின்றனவும் ஆகிய தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப்பிரபந்தம், திருவருட்பாப் போன்ற அருளிச் செயல்களாகிய அன்பும் அருளும் நிறைந்த பல துதி நூல்களையும்; இலக்கணங்களையும் காப்பியங்களையும் பிறவற்றையும் கற்றற்குத் துணையாமாறு பலவகைப்பட்ட அரிய முடிபுகளையும் கருத்துக்களையும் தம்மகத்துக் கொண்டு, எவர்க்கும் இளமையிலேயே அவையிற்றை வரலாற்று முறைப்படி எளிதிற் புகட்டவல்ல பெருமையினையுடைய சிவப்பிரகாசர் பிரபந்தத்திரட்டு, சொட்டுஞ்சுவையார் அட்டப்பிரபந்தம் போன்ற பல சிறு காப்பியங்களையும் தண்டமிழ் மூதாட்டியாம் ஔவைப்பாட்டியாரின் பல திறப்பட்ட அருளிச்செயல்களையும்; பலவான ஞானநூல்களையும், மருத்து நூல்களையும். சோதிட நூல்களையும்; பிறமொழிகளிலுள்ள அரிய பெரிய கருத்துக்களைத் தன்பால் மொழிபெயர்த்துச் சேர்த்துக் கொள்ளத்தக்க சொல்லாற்றலினையும் பெற்றிருக்கின்றது. அன்றியும், அது தன்னைத் தாய்மொழியாகக்கொண்ட ஓர் அரசரையும், பல ஜமீன்தார்களையும், பல மடாதிபதிகளையும் பல நூறு பெரும் பொருளாளர்களையும், சற்றேறக்குறைய இருநூறு லட்சம் மக்களையும், பல தர்மஸ்தாபனங்களையும், பல கழகங்களையும், பல பத்திரிகைகளையும், பிறவற்றையும் பெற்றிருக்கின்றது. இம்மட்டோ அதன் பெருமை? அஃது இவ்வளவோடு நில்லாது வளர்வதற்கும் வளர்ப்பதற்கும் தகுதியாகப் பெருமை பொருந்திய உலக வழக்கிலுள்ள பேச்சு வழக்கு மொழியாகவுமிருக்கின்றது. இங்கு இதைப்பற்றிப் பன்னிப் பன்னிப் பல கூறலாம். எனினும், அடியேன் அங்ஙனம் கூறி உங்களது மேலான உயிரினுஞ் சிறந்த காலத்தைக் கொள்ளை கொள்ளத் துணியமாட்டேன்.

புயற் காற்று

[V. நாராயணையர் M. A., M. L.]

(பிரஹ்ம ஸமாஜத்தைச் சேர்ந்த அந்நதபாபுவின் குமாரியும், நண்பன் யோகேந்திரனின் சகோதரியுமான ஹேமநளினியை இராமேசன் காதலித்ததும், அவனுடைய தகப்பனார் அவனை ஊருக்குக் கூட்டிச்சென்று அங்கே அவனுக்கு மணம் செய்வித்ததும், மணம் கழிந்து ஊருக்கு மணப்பெண்ணுடன் திரும்பி வரும்போது புயற்காற்றால் ஆற்றில் ஓடங்கள் கவிழ்ந்ததும், அப்போது வேறு ஓடத்தினின்றும் தப்பிப்பிழைத்த கமலா என்ற சிறு பெண்ணை தன் மனைவி யெனவும் அவளும் கல்லியாணகாலத்தில் தன்புருஷன் முகத்தை நன்றாய் பார்த்திராததால் இராமேசனை தன் கணவனெனவும் கொண்டதும்; பிறகு இராமேசன் கமலாவை டோபாபுகூர் தாணீ சரணரின் தமையன் மகள் என்றும், வேறுஒருவர் மனைவி என்றும் அறிய, அவளைப்பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியதும் வக்கீல் வேலையில் அமர்ந்து ஹேமநளினியை மறுபடி காடி கல்லியாணத்திற்கு உடன்பட்டதும்; கல்யாண தினமும் குறிப்பிடப்பட்டு, உறவினர்களுக்கு அழைப்பு கடிதங்கள் அனுப்பிய பின்னர், கமலாவை பள்ளிக்கூட விடுமுறை நாளானதால் வீட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென்று உபாத்தியாயினியிடமிருந்து கடிதம் அடைய, கமலாவின் கதையை இதுவரை வெளியிடாத இராமேசன் ஒன்றும் தோன்றாது கலங்கி, பிறகு கல்யாணதினத்தை ஒதுக்கிவைக்க அந்நதபாபுவை வேண்டியதும், அவர் அதற்கு கடைசியாக உடன்பட்டுவிட்டதும்; பிறகு வெளியூருக்குச் சென்றிருந்த யோகேந்திரன் வந்து கல்லியாண காரியங்கள் நடைபெறாததைக் கேட்டு, கவலையுற்று, அக்ஷயனுடன் இராமேசன் வீடு சென்று, அங்கு பள்ளிக்கூடமிருந்து வந்த கமலாவுடன் இராமேசன் பேசிக்கொண்டிருந்ததை நேரில் பார்த்து, இராமேசனோடு ஆத்திரத்துடன் வாதாடியதும்; பிறகுஅக்ஷயனுடன் தன் வீட்டிற்கு வந்து சமாசாரங்களை வெளியிட்டு, அந்நத பாபுவையும் ஹேமநளினியையும் வருந்தச் செய்ததும்; பிறகு இராமேசன் கமலாவுடன் தன்னூர் செல்லப்புறப்பட்டு அக்ஷயன் பின்தொடர்ந்ததையும், அவனை ஏமாற்றிக் கப்பல் மார்கமாய் வேறு இடம் சென்றதும்; கப்பல் சிறிதூதூரம் போனபிறகு ஆற்றில் மணலில் சிக்கிக்கொண்டதும், ஓர் இரவில் கமலாவிடம் உண்மையைத் தெரிவிக்கக் கருதி, கதைமூலமாக மறைத்து எடுத்துரைக்க நோக்கங்கொண்டதும்; உடைவாளை முன்னதாக அனுப்பி அதை வைத்து கணவன் நேரில் இல்லாது மணம் புரியும் ராஜபுத்திரர்கள் கதையை இயற்றிச் சொன்னதும்; சென்ற சஞ்சிகைகளிலுள்ள கதை.)

"மதுரைக்கரசனான ரணஜித சிங்கன் காஞ்சீபுரத்தரசனுக்குத் தூதனுப்பி அவர் மகளை தனக்கு மனைவியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கவே, அமரசிங்கனும் சரியென்று இசைந்தான்.

"பிறகு, ரணஜிதனின் தம்பியான இந்திரஜித சிங்கன் அமரசிங்கன் ஊருக்கு சைனியத்துடனும், பேரி மத்தளம் எக்காளம் முதலிய வாத்திய கோஷத்துடனும், காஞ்சீபுரத்திற்குப் போனான். அந்த ஊரெல்லாம் ஜய ஜய வென்று ஒரே கல்லியாணக்குழப்பமாயிருந்தது.

"அப்புறம், ஜோஸியர்கள் ஒரு நல்ல நாளாய் கல்லியாணத்திற்கு ஒரு சுப முகூர்த்தம் பார்த்தெடுத்தார்கள்; அதாவது, கிருஷ்ண பக்ஷத்து வாதசியன்று ராத்ரி நடு நிசிக்கப்பால் ஐந்து நாழிகை கழிந்த பின்பு, என்று; அன்றிரவு, ஊரெல்லாம் வீடுகள் எங்கும் தோரணமயமாயிருந்தது: ஊர்முழுவதும் தீபங்கள் பகல் போற் பிரகாசித்தன; அரசிளங்குமாரி சந்திராவின் மண நாளன்றோ.

"ஆனால் மணப்பெண்ணுக்கு தன்னை யாளவரும் கணவன் யார் என்று தெரியாது; பரமானந்தஸ்வாமிகள் என்ற பெரியோர் ஒருவர் அவள் பிறந்தவுடன் அவளுடைய தகப்பனாரிடம் 'இந்தப் பெண்ணின் ஜாதகத்தில் ஒரு கிரகம் கோணலாக இருக்கிறது. அவளுக்கு மணமாகும் காலம் வரும்போது யாருக்கு வாழ்க்கைப்படப்போகிறாள் என்பதை அவளுக்குத் தெரிவிக்கக் கூடாது' என்று சொல்லி யிருந்தார்.

"காலாகாலத்தில் ராஜகுமாரிக்கும் உடைவாளுக்கும் கல்லியாணச்சடங்குகள் நடந்தன. மணவாளன் வழக்கமாய் அளிக்கும் பரிசுகளை இந்திரஜிதன் கொடுத்துதவி, தன் தமையன் மனைவி யென்று ராஜகுமாரியை நமஸ்கரித்தான்; இராமனுக்கு இலக்ஷ்மணன் எப்படியோ, அப்படி இந்திரஜிதன் ரணஜிதனுக்கு: முகவலை மறைத்திருந்தும் வெட்கி நின்ற ராஜகுமாரியின் முகப்புறத்தை அவன் கண்ணெடுத்துப் பார்ப்பானோ? அரக்கூட்டிய அவளது அழகிய சிறு பாதங்களில் ஒலிக்கும் சிலம்புக்குக் கீழ்ப்புறத்தை நோக்கி நமஸ்கரித்து நின்றான் இந்திரஜிதன்.

"கல்லியாணமானபின், அடுத்த நாள் அலங்கரித்து மேல்கட்டுடன் விளங்கிய ஒரு அழகிய பல்லக்கில் ராஜகுமாரியை ஏற்றுவித்து தன்னூருக்குப்புறப்பட்டான் இந்திரஜிதன்; காஞ்சீபுரத்தரசனும் தன்மகளுக்குக் கிரகப்பிழையுறும் காலம் என்று நினைந்து அவள் புறப்படுமுன் சிரமேல்

அங்கை வைத்து அவளை ஆசீர்வதித்து அனுப்பினான். இராணியும் தன்மகளை புக்ககம் அனுப்பும்போது தன்னை அறியாமல் கண்ணீர் சொரிந்தனள்; அவ்வூர்க் கோயில்களில் எங்கும் தீவினையை அகற்றுமாறு பூசனைகளும் தெய்வாராதனைகளும் நடத்தப்பட்டன.

"காஞ்சீபுரத்திலிருந்து மதுரை நகர் வெகுதூரம்; சுமார் ஒருமாத வழி யிருக்கும். புறப்பட்ட மறுநாட் சாயங்காலம் வழியில், வேட்ஸா நதிக்கரையில் கூடாரங்கள் அமைத்து இரவிற் தங்க ஏற்பாடு பண்ணும்போது சமீபத்திலிருந்த கானகத்தில் தீவட்டி வெளிச்சம் தெரிந்தது. இந்திரஜி தன் ஒரு காவலாளியை முன் அனுப்பி அது என்னவென்று அறிந்துவரச் சொன்னான்; அவன் சற்றுநேரத்தில் திரும்பவந்து 'யஜமானே நம்மைப்போல் கல்லியாணம் கழிந்து திரும்பவரும் கூட்டம்ஒன்று அது; அவர்களும் நம்மைப்போன்ற ராஜபுத்திரர்கள்; மணப்பெண்ணை காவலுடன் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்கின்றனராம்; வழியிற் பயமுண்டென்று அவர்களும் தங்கள் பாதுகாப்பில் தங்களுடன் பாதி வழி செல்ல தங்கள் உத்தரவை வேண்டுகின்றனர்' என்று சொன்னான்.

"அதற்கு ராஜகுமாரன் 'நம்முடைய பாதுகாப்பை வேண்டும் எவரையும் காப்பது கடனன்றோ? நம்மாலானமட்டும் அவர்களை காப்பாற்றுவோம்; அவர்களும் கூடவரட்டும்' என்று சம்மதிக்கவே, இருகூட்டத்தாரும் ஒன்று சேர்ந்து வழி நடக்கலாயினர்.

"மூன்றும் நாள் அமாவாசை தினம்; வழியில் முன்புறம் மலைச்சாரல், பின்புறம் அடர்ந்த காடு; வழி நடந்த படைவீரரும் அருவிச் சத்தத்தைத் தவிர வேறு சத்தமின்றி அமைதியாயிருந்த நள்ளிருளில் அயர்ந்து நித்திரை கொண்டனர்.

"திடீரென ஒரு கலவரம் உண்டாகவே அவர்களெல்லாரும் திடுக்கிட்டு எழுந்தனர்; மதுரைக் கூட்டத்தாரின் குதிரைகள் திகைத்தோடின, யாரோ அவைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள் போலும்; ஆங்காங்கு சில கூடாரங்களும் தீப்பிடித்து எரிந்தன; சந்திரனில்லா இருள்வானமெங்கும் தீயின் செவ்வொளி வீசியது.

"உடனே அவர்களுக்கெல்லாம் புலப்பட்டது. கொள்ளைக்காரர்கள் வந்து தங்களை எதிர்க்கிறார்கள் என்று அறிந்தார்கள்; இருட்டில் உண்டான அந்தக் கலவரத்தில் யார் சொந்தக் கக்ஷியார், கொள்ளைக்காரர் என்றுகூட அறிய முடியவில்லை; ஆகவே அந்தச் சந்தடியில் கொள்ளைக்காரர்கள் கொள்ளை யடித்துக் கொண்டு மலைச்சாரல்களில் ஓடி யொளிந்து கொண்டார்கள்.

"சந்தடி அமர்ந்ததும் ராஜகுமாரியை எங்கும் தேடிப்பார்த்தார்கள், காணமுடியவில்லை; பயங்கொண்டு தன் கூடாரத்தினின்றும் ஓடிப்போய் துணைதேடி வந்த வழிப்போக்கர்கள் கூட்டத்தை தம்மினத்தார் என்று நினைத்து அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

"அவர்களுடன் வந்த புதுமணப் பெண்ணை கொள்ளைக்காரர்கள் தூக்கிச் சென்றிருந்ததால் அவர்களும் ராஜ குமாரியை தங்களுடன் வந்த மணப்பெண்ணென்றே நினைத்து அவளை அதிவேகமாய் தங்களூருக்குக் கூட்டிச் சென்றனர்.

"அவர்களோ கர்னாடக தேசத்தில் சமுத்திரக் கரையோரத்தில் குடியேறியிருந்த ராஜபுத்திர வம்சத்தினர்; அவர்களுடைய தலைவனான ஜெயசிங்கனிடம் அதாவது மற்ற மணப்பெண்ணின் கணவனிடம் சந்திரா தேவியைக் கூட்டிச் சென்றனர்.

"ஜெயத் சிங்கனுடைய தாயும் சந்திராவை நல்வரவேற்று உபசரித்தாள். அங்கு கூடிய பந்துக்கள் எல்லோரும் இவ்வளவு அழகிய பெண்மணியை நாங்கள் கண்டதேயில்லை என்றனர்.

"தனக்கு நல்ல அதிர்ஷ்டம் வாய்ந்ததென்றே கருதினான் ஜெயத்சிங்கனும்; அவளுடைய அழகைக்கண்டு மனம் பூரித்து தன்னகத்துறை காதற் தெய்வம்போல் அவளைப் பாராட்டினான். ராஜகுமாரியும் தரும பத்தினியின் கடமைகளை நன்குணர்ந்தவளாதலால் கணவனென தான் நினைத்த ஜெயத்சிங்கனுக்கு தன் வாழ் நாட்களை அர்ப்பணம் செய்திருந்தாள்.

"இப்படியிருக்கையில், கொஞ்சநாளில் அவர்கள் இருவருக்கும் இருந்த சங்கோசம் நீங்கி ஒருவரோடொருவர் பேசத்தொடங்கினர்; அப்போது தான் தன் வீட்டிற்கு வந்து தர்ம பத்தினிபோல் வசிக்கும் பெண்மணி தன் மனைவியல்ல, சந்திரா என்ற ராஜகுமாரி என்று ஜெயத்சிங்கனுக்குப் புலப்பட்டது."

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழிபெயர்த்தமைத்தது.

விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10 படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.

விலை ரு. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

கதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

ஸி. சுப்பிரமண்ணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. விலை ரூபா 1.

மானேஜர், சுதேசமித்திரன்,

சென்னை.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினால், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனாம்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.
Telegrams: "Adimoorthi" Benares.

கதர்! கதர்!! கதர்!!! ஸ்ரீ பண்டார் சுத்த சுதேசிய உடை!!!

பெயர்பெற்ற மோரதாபாத் கதர் உடைகளின் நிலயம்.

விலை வெகு குறைவானது. இந்ியா, பர்மா, சிலோன் எங்கும் சுதேசிய பண்டக சாலைகளுக்கு நாங்களே கதர் உடைகள் மொத்தமாய் அனுப்புகிறோம். ஓர்முறை வாங்குபவர் நீடித்து எங்களிடமே வியாபாரம் செய்வார்சள்.

கதர் துணிகள்.

நெ. 1.	10 கஜம்	× 25"	ரூ 2½	முதல்	ரூ 3	வரை
,, 2.	12 ,,	× 27"	,, 4	,,	6	,,
,, 3.	16 ,,	× 34"	,, 6	,,	9	,,
,, 4.	18 ,,	× 36"	,, 8	,,	12	,,
,, 5.	20 ,,	× 44"	,, 11	,,	13	,,

வெளுக்கப்படாத கதர் உடைகள் பீஸ் ஒன்றுக்கு கால் ரூபாய் குறைவாக கிடைக்கும். ஆர்டருடன் முன்பணமாக 4ல் 1 அனுப்பவேண்டும்.

தந்தி விலாசம்: **'Shree'**

கதர் சேலைகள் முதலியன.

10 கஜம்	× 45"	ரூ 4½	முதல்	ரூ 6	வரை
9½ ,,	× 40"	,, 3	,,	5	,,
3 ,,	× 1½ கஜ	,, 2	,,	3	,,

எங்களிடம் கிடைக்கும் வேறு பலவித சுதேசிய துணிகளின் விலை விபரங்களை எழுதிக்கேட்டறிந்துகொள்ளலாம்.

SHREE BANDAR,
Mandi Bans Street,
Moradabad, U. P.

GOOD SEEDS

As good as can be grown. Sow the right kind of seed at the right season and save disappointment. We have just the right kind of seeds for Indian climate both flower and vegetable.

Beautifully illustrated large descriptive catalogue free on application. (Please mention this paper when writing and correspond in English only.)

Pestonjee P. Pocha & Sons
Seed Merchants, POONA.

The United India Life Assurance Co., Ltd.

Head Office: Madras
(Established 1906)

இந்தியர் நிர்வாகத்திலிருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி சென்னையில் இதொன்றே. உயிரின் நிலையில்லாமையை நினைத்து, நம் தமிழ் நாட்டாரனைவரும் இக்கம்பெனியில் சந்தாதாரராகச் சேர்ந்து நலம் பெறுவாராக. சென்ற வருஷத்தில் கிடைத்துள்ள லாபத்திலிருந்து ரூ1000 பாலிஸிக்கு ரூ15 வீதம் சந்தாதார்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது. ஏஜெண்டுகள் தேவை.

Apply to:—K. S. Gopalayya,
Manager.

இனாம்! இனாம்!!

அழகான 12 ஷீட் கியாலண்டர். தமிழ் இங்கிலிஷ் தேதியுள்ளது.
ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி தங்கள் விலாசத்தை
ரிஜிஸ்தர் செய்துகொள்ளுங்கள்; முந்துங்கள்.

சகல விதமான பட்டு தினுசுகளும்
காசி விலைக்கு கொடுக்கப்படும்.
:: ஒருமுறை பரிக்ஷியுங்கள் ::

K. S. MUTHIAH & Co.,
188, Govindappa Naick Street, Madras.
Head Office: BENARES.